தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.11.2013**

## 524 ஹெக்டேர் பரப்பில் துல்லிய பண்ணைத் திட்டம்

புதுவை வேளாண் துறை சார்பில் 524 ஹெக்டர் பரப்பில் துல்லிய பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கோ.சுரேஷ் தெரிவித்துள்ளார்.

வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிலையம் சார்பில் துல்லிய வேளாண்மை வாய்ப்புகள், சவால்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இக் கருத்தரங்கை நிலைய இயக்குநர் மோகன். ஆ.சவேரி வரவேற்றார். கூடுதல் வேளாண் இயக்குநர் ஜெய்சங்கர், திட்ட இயக்குநர் ரவிப்பிரகாசம் ஆகியோர் பேசினர். வேளாண் துறை இயக்குநர் அ.ராமமூர்த்தி கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

இக் கருத்தரங்கில் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் சுரேஷ் தலைமை வகித்துப் பேசியதாவது: புதுவையில் துல்லிய பண்ணைத் திட்டம் வெறும் 13 ஹெக்டர் பரப்பில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. தற்போது வேளாண் அறிவியல் நிலையத்தின் தீவிர முயற்சியாலும், விவசாயிகளின் ஒத்துழைப்பாலும் 524 ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதை மேலும் விரிவுபடுத்த வேண்டும். தொழில் நுட்பக் கல்வி பயின்ற இளைஞர்கள் பண்ணைக் கருவிகள் இயக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இதற்காக புதுவை அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்றார். கோவை அக்ரி சிஸ்டம்ஸ் பவுண்டேசன் தலைவர் வடிவேல், வேளாண் துறை துணை இயக்குநர் ஜாகீர் உசேன், துல்லியப் பண்ணைய

விவசாயிகள் சங்கத் தலைவர் பாட்சா, துல்லியப் பண்ணை உற்பத்தியாளர் செந்தில், உதவிப் பேராசிரியர் ஈஸ்வரன், திட்ட ஒருங்கிணைப்பாளர் சாத்தையா ஆகியோர் பேசினர். துணை இயக்குநர் செழியன் பாபு வரவேற்றார்.

**விவசாயிகளுக்கு மானிய இயந்திரங்கள்: நெல்லைக்கு ரூ.134.70 லட்சம் ஒதுக்கீடு**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்குவதற்காக நிகழாண்டு ரூ.134.70 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக ஆட்சியர் கருணாகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மைப் பணிகளை எளிதாக்கும் வகையில் இயந்திரமயமாக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆண்டுதோறும் மானிய விலையில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2013-14 ஆம் ஆண்டுக்கு ரூ.134.70 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் உபகரணங்கள் பெறும் விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டுமே வேளாண் கருவிகளை வாங்கலாம்.

விவசாயிகள் அவரவருக்குரிய இயந்திரம், கருவிகள், உபகரணங்களை வாங்குவதற்கு உரிய விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பட்டா, அடங்கல், நில வரைபடம், குடும்ப அட்டை நகல், விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினத்தவராக இருந்தால் சாதிச் சான்று இணைக்க வேண்டும். ஒதுக்கீடுபெற்ற நிதிக்கு தகுந்தபடி விவசாயிகளின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்தி செய்து வழங்கவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:

உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, என்ஜிஓ அ காலனி, திருநெல்வேலி, 0462-2552572, 94433-65790.

உதவி செயற்பொறியாளர், ரயில்வே பீடர் சாலை, சேரன்மகாதேவி, 94431-53243, உதவி செயற்பொறியாளர், ரயில்வே தொழிலாளர் சாலை, தென்காசி, 04633-280160, 94431-35291.

**சம்பா நெல் பயிரில் இலைமடக்குப் புழு: வேளாண் அறிவியல் நிலையம் யோசனை**

நாகை மாவட்டத்தில் சம்பா நெல் பயிரில் காணப்படும் இலைமடக்குப் புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம் விளக்கியுள்ளது.

இதுகுறித்து அறிவியல் நிலையத் தலைவர் கு. சசிகலா மற்றும் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் தி. இளையபாரதி ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்ட சம்பா நெல் பயிரில் தற்போது வானிலை மாற்றம் காரணமாக இலைமடக்குப் புழு தாக்குதல் காணப்படுகிறது. நேரடி விதைப்பு செய்யப்பட்ட நெல் பயிர்களில் இத்தாக்குதல் அதிகளவில் தென்படுகிறது.

இலைமடக்குப் புழுவின் தாய்ப்பூச்சி சிறியதாகவும், மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில், இறக்கைகளில் சாய்வான கோடுகளுடன் இருக்கும். இந்தப் புழுக்கள், தட்டையான சிறு வெள்ளை நிற முட்டைகளை தனித்தனியாக இலைகளின் மேல் இடும். இந்தப் புழுக்கள் பாதித்த இலைகளின் மேல் பாகம் வெள்ளை நிறமாக இருக்கும்.

இலைகளில் உள்ள பச்சயங்களை இந்தப் புழுக்கள் சுரண்டி உண்பதால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும். கண்ணாடி இலைப் பருவத்தில் இந்தப் புழு தாக்குதல் அதிகரித்தால், மகசூல் வெகுவாகக் குறையும். புழுக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மண்ணில் அதிகளவு தழைச்சத்து இடுவதைத் தவிர்த்து, தழைச்சத்தை

3 முதல் 4 முறையாக பிரித்து இடுவதால், இந்தப் புழுக்களின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

நிழல்படும் இடங்களில் இந்தப் புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருப்பதால், அந்த இடங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இந்தப் பகுதிகளில், கார்ட்ராப் ஹைட்ரோகுளோரைடு 400 கிராம், புளூபெண்டி அமைடு 30 மி.லி ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம்.

மழைநீர் அதிகம் தேங்கியுள்ள வயல்களில் கார்ட்ராப் ஹைட்ரோகுளோரைடு என்ற குருணை வடிவ பூச்சிக்கொல்லியை ஏக்கருக்கு 4 கிலோ வீதம், 2 கிலோ மணலில் கலந்து தூவி இலைமடக்குப் புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

**மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி பெற அழைப்பு**

பெரம்பலூர் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் நவ. 15-ம் தேதி நடைபெறும் மண்புழு உரம் தயாரித்தல் குறித்த தொழில்நுட்ப பயிற்சி பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.வெங்கடேசன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், விவசாயிகளுக்கு நவ. 15-ம் தேதி காலை 10 மணி முதல் 1 மணி வரை மண்புழு உரம் தயாரித்தல் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், மண்புழு உரத்தின் முக்கியத்துவம், மண்புழு உரம் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய விதிமுறைகள், உரம் தயாரிக்க தேவையான பொருள்கள், குழிமுறை மற்றும் வர்த்தக ரீதியாக குவியல் முறையில் மண்புழு உர உற்பத்தி, மண்புழு உரம் பிரித்தெடுத்தல், உரத்தின் பயன்கள் குறித்து காணொலி காட்சி மற்றும் செயல்விளக்கங்கள் மூலம் விளக்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் நேரில் அல்லது 04328 293592, 293251, 8939003569 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

**நாமக்கல்லில் முட்டையின் விலை ரூ.3.90 ஆக உயர்வு**

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு முட்டையின் விலையை ரூ.3.90 ஆக உயர்த்தி  நிர்ணயித்துள்ளது.

கடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ.3.25 இருந்த முட்டை விலை படிப்படியாக உயர ஆரம்பித்ததின் காரணமாக பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வட மாநிலங்களில் மழை, குளிர்காலம் என்பதால் முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால், வட மாநிலங்களுக்கு அதிகளவு முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதால், கடந்த ஒரு வாரமாக முட்டை விலை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு முட்டை விலையை செவ்வாய்க்கிழமை ரூ. 3.90 ஆக உயர்த்தியது.

முட்டை விலை மேலும் உயரும் என தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் நல்லதம்பி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**கோமாரி நோயால் மாடுகள் பாதிப்பு: ஆரணி எம்எல்ஏ நேரில் ஆய்வு**

ஆரணி, நவ 12:  கண்ணமங்கலம் அருகே உள்ள பாளையஏகாம்பரநல்லூர் கிராமத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை கால்நடை மருத்துவருடன் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று ஆரணி எம்எல்ஏ பாபுமுருகவேல் பார்வையிட்டார்.

கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை பரிசோதனை செய்த கால்நடை மருத்துவர் முத்துக்குமார் கூறியது: மாடுகள் கோமாரி நோயால் பாதித்தால் வாயில் நுரையும், கால்களில் புழு ஆகியவை தெரியும். இந்நோயால் பாதிக்கப்படாமல் இருக்க மாடுகளுக்கு வருடத்திற்கு இரண்டு முறை தடுப்பூசி போடப்படுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக கோமாரி நோய் இல்லாமல் இருந்துவந்தது. தற்போது வெளிமாநிலங்களில் இருந்து கால்நடைகளை வாங்கி வந்ததால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் தடுப்பூசி போட்டால் மாடுகள் பால் குறைவாக சுரக்கும் என்ற காரணத்தால் சிலர் தடுப்பூசி போட்டுக் கொள்ள மாட்டார்கள். இதனால் ஏற்படும் விளைவுதான் இது. தடுப்பூசி போட்டால் சிறிதளவு மட்டுமே பால் குறையும். என்று கூறினார்.

இதுகுறித்து தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் எம்எல்ஏ ஆர்.எம்.பாபுமுருகவேல். உடன் மேற்கு ஆரணி ஒன்றியச் செயலர் மோகன், துணைச் செயலர் வாசுதேவன், ஊராட்சிமன்றதலைவர் யுவராஜ் ஆகியோர் இருந்தனர்.

**காங்கயம் பகுதி நெல் நடவு வயல்களில் இலை மடக்குப் புழுத் தாக்குதலால் பாதிப்பு**

காங்கயம் பகுதியில் 700 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கும் நிலையில், அதில் இலை மடக்குப்புழு தாக்குதலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பூச்சியை கட்டுப்படுத்தும் முறை குறித்து திருப்பூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.முகமது கலிமுல்லா ஷெரீப் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:

காங்கயம் வட்டாரத்தில் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்தில் 700 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், மருதுறை, நத்தக்காடையூர், குட்டப்பாளையம், பழையகோட்டை, நான்கு சாலை, மரவபாளையத்தில் நெல் நடவு வயல்களில் இலை மடக்குப் புழுவின் தாக்குதலால் பாதிப்பு காணப்படுகிறது.

நெற்பயிரில் இலையைத் தாக்கும் பூச்சிகளில் இலை மடக்குப் புழு மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதனால் 30-80 சதவீத இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இப்பூச்சி தாக்குதல் அதிகரிக்க அதிக உரங்கள் இடுதல், வயலைச் சுற்றி அதிக அளவில் புல் இன களைகள் இருத்தல், அதிக ஈரப்பதம், அதிக நிழல் உள்ள இடங்கள் இருப்பது காரணங்களாகும்.

தாக்குதல் விவரங்கள்: இப்புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும். தீவிரத் தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இலைகள் நீளவாக்கில் சுருண்டு புழுக்கள் அதற்குள் இருக்கும்.

மேலாண்மை: இதைக் கட்டுப்படுத்த வரப்புகளை சீராக்கி புல் இனக் களைகளை நீக்க வேண்டும். முட்டை ஒட்டுண்ணி டிரைகோகிரம்மா கைலோனிஸ் அட்டைகளை பயிர் நடவு செய்து 37, 44 மற்றும் 51 நாட்களில் மொத்தம் 3 முறை 5 சிசி என்ற  அளவில் காலை நேரத்தில் வயலில் கட்ட வேண்டும். வேப்பங்கொட்டைச்சாறு ஹெக்டேருக்கு 5 சதவிகிதமும் 25 கிலோ (அல்லது) வேப்பெண்ணை 3 சதவீதமும் தெளிக்கவேண்டும்.

விளக்குப் பொறிகள் அமைத்தல்: 5 ஹெக்டேருக்கு குறைந்தது ஒரு விளக்குப்பொறியாவது அமைக்கவேண்டும். நெற்பயிரின் தலைப் பருவத்தில் பூச்சி உண்ணும் பறவைகள் அமர இருக்கைகளை வயலில் பொருத்த வேண்டும். பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பொறுத்தவரை பொருளாதார சேத நிலையை

தாண்டியிருந்தால் ஹெக்டேருக்கு பெனிட்ரோத்தியான் 50 இ.சி., 1,000 மி.லி. அல்லது மோனோகுரோட்டாபாஸ் 36 எஸ்.எல்., 1,000 மி.லி. அல்லது பாசலோன் 35 இ.சி. 1,500 மி.லி. அல்லது குயினல்பாஸ் 25 இ.சி., 1,000 மி.லி. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல வேண்டாம்: கால்நடை ஆராய்ச்சி மையம் தகவல்**

கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று, ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து, இம் மையத்தின் தலைவர் இரா.யசோதை, உதவிப் பேராசிரியர்கள் ஆ. கிருபாகரன், நா.வீ.கவிதா ஆகியோர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கோமாரி நோயானது வாய்ச் சப்பை, கால் சப்பை, வாய்காணை, கால்காணை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இந் நோயானது பெரும்பாலும் மழைக்காலங்களில் குளிர்ச்சியான சீதோஷண நிலையில் கால்நடைகளைத் தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். இது ஒருவகை வைரஸ் கிருமியால் ஏற்படக்கூடியது.

இந்நோய் தாக்கிய கால்நடைகளின் உமிழ்நீர் கெட்டியாக கயிறுபோலத் தொங்கிக்கொண்டிருக்கும் மற்றும் காய்ச்சல் இருக்கும். மேலும், வாய் மற்றும் நாக்கு, மேல் அன்னம், கால் பாதம், பால் மடி, பால் காம்புகளில் பாதிப்பு உண்டாகி புண்ணாக மாறிவிடும்.

இதனால், கால்நடைகள் நொண்டி நடப்பதுடன் நாக்கில் உள்ள புண் காரணமாக சரிவரத் தீவனம் உட்கொள்ள முடியாது. மேலும், சிறு கன்றுகளில் இதய தசைகளில் பாதிப்பை உண்டு பண்ணக்கூடிய இயல்புடையது. நோய் பாதிப்புக்கு உள்ளான கறவை மாட்டின் பாலை நன்கு காய்ச்சிய பின்னரே கன்றுகளுக்கு கொடுக்க வேண்டும்.

கஞ்சி காய்ச்சி ஆற வைத்து அதனை கால்நடைகளுக்கு புரை ஏற்படாமல் புகட்ட வேண்டும். அவ்வாறு செய்வதன் வாயிலாக கால்நடைகளுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் கிடைக்கும். இல்லையெனில் கால்நடைகள் விரைவில் மெலிந்துபோக வாய்ப்புள்ளது.

கால் பாதங்களில் உள்ள புண் மற்றும் மடிக் காம்புகளில் உள்ள புண்ணுக்கு கீழ்கண்ட முறையில் கலவையைத் தயார் செய்ய வேண்டும். பூண்டு 10 பல், மஞ்சள் 10 கிராம், துளசி 10 இலைகள், குப்பைமேனி 10 இலைகள், மருதாணி 10 இலைகள் மற்றும் வேப்பிலை 10 இலைகள் போன்றவற்றை நன்கு அரைத்து, அதனுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சேர்த்து 10 நிமிடம் வரை சூடுபடுத்த வேண்டும். இதனை பிறகு ஆற வைக்கவேண்டும்.

கால் பாத புண் மற்றும் மடிக் காம்பு புண்ணை நன்கு உப்பு மற்றும் மஞ்சள் கலந்த தண்ணீரால் கழுவி, சுத்தமான துணியால் துடைத்து, பிறகு தயார் செய்து வைத்துள்ள கலவையை அதன் மீது தடவ வேண்டும். கால்நடைகளை பொதுவான மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது. மேலும், மாடுகளை

வாங்குவதோ அல்லது விற்பதோ கூடாது. வெளி ஆள்களை பண்ணையினுள் அனுமதிக்கக் கூடாது. கால்நடைகள் உள்ள கொட்டகையின் தரைப்பகுதியை நன்கு சுத்தம் செய்து அதன் மேல் சுண்ணாம்புத் தூள் அல்லது பிளீச்சிங் பவுடரைத் தூவ வேண்டும்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 68.57 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 68.57 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,232 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீரும், வாய்க்காலில் 1,950 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 10.36 டி.எம்.சி.

**15 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை (நவ.15) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பதிவேடுகளில் பொதுப் பிரச்னைகள் குறித்து பதிவு செய்த விவசாயிகள், கோரிக்கைகளின் அடிப்படையில் கூட்டத்தில் பேச அனுமதிக்கப்படுவர்.

விவசாயம் தொடர்புடைய தனிநபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகளை மனுக்களாக ஆட்சியரிடம் நேரடியாக வழங்கலாம்.

**கோமாரி நோய்க்கு 200 மாடுகள் சாவு: திணறும் கால்நடைத் துறையினர்**

கடலூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி 200-க்கும் அதிகமான மாடுகள் இறந்துள்ளதாக தெரியவந்துள்ளது. நோயின் பாதிப்பு தீவிரமாக உள்ளதால் விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர். இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் கால்நடைத் துறை அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழையை யொட்டி கடந்த சில வாரங்களாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கோமாரி நோயினால் கால்நடைகள் செத்து மடிந்துகொண்டு இருப்பதால் பால் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் பூதங்குடி, கண்ணங்குடி, உத்திரசோலை, கீழநத்தம், மதுராந்தகநல்லூர், ராயநல்லூர், ஒரத்தூர், ஓடாக்கநல்லூர், வாழாக்கொல்லை, கீழநத்தம், கரும்பூர், தொரப்பாடி, வீரப்பெருமாநல்லூர், பகண்டை, மருதூர் ஸ்ரீமுஷ்ணம் பேரூர் உள்ளிட்ட பல கிராமங்களில் 200-க்கும் அதிகமான கால்நடைகள் கோமாரி நோய் தாக்கி இறந்துள்ளன. இது தவிர நூற்றுக்கணக்கான மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பால் உற்பத்தியும் குறைந்து உள்ளது.

இதுகுறித்து விவசாய சங்கப் பிரதிநிதி குஞ்சிதபாதம் கூறியது: கடலூர் மாவட்டத்தில் குறிப்பாக டெல்டா பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி 200-க்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளன. கால்நடைத் துறை அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்ட போதிலும் கால்நடைகள் இறப்பு இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. நடமாடும் மருத்துவக் குழுக்களை கூடுதலாக அமைத்து நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை யெடுக்க வேண்டும் என்றார்.

கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனர் (பொறுப்பு) கணேசன் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் 150 கால்நடைகள் கோமாரி நோய் அறிகுறியுடன் உள்ளன. அவற்றுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

நமது அண்டை மாவட்டமான நாகையில் கோமாரி நோயினால் கால்நடைகள் இறந்துள்ளன. இதனால் அப்பகுதியில் இருந்து வாங்கி வரப்படும் கால்நடைகள் மூலம் கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில், குமராட்சி உள்ளிட்ட கொள்ளிடக்கரை பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு அதிகமாக உள்ளது.

எனவே வெளி மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை வாங்கிக்கொண்டு வர வேண்டாம் என்று விவசாயிகளிடம் அறிவுறுத்தி வருகிறோம். அதோடு, நோய் பாதித்த கால்நடைகளை வெளியில் கொண்டுவர வேண்டாம் என்றும், அவரவர் மாட்டு தொழுவத்தில் வைத்தே சிகிச்சை அளிக்குமாறும் சொல்லியிருக்கிறோம்.

ஏனெனில் கோமாரி நோய் வைரஸ்கள் காற்றில் பரவக் கூடியது என்பதால், நோய் பாதித்த கால்நடைகளை வெளியே கொண்டு வரும்போது, அதன் மூலம் மற்ற கால்நடைகளுக்கு பரவ வாய்ப்பு இருக்கிறது.

நோய் பாதித்த மாடுகளுக்கு தொடர்ந்து 3 நாள்கள் ஊசி மருந்து போட்டால் குணமாகி விடும், அதன்பிறகு சில நாள்கள் அவற்றை வெளியே கொண்டு செல்லாமல், தொழுவத்திலேயே வைத்து சத்தான உணவுகளைக் கொடுத்துவர வேண்டும். கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட பசுமாடுகளின் பாலை கன்றுகளுக்குக் கொடுக்க வேண்டாம்.

கொள்ளிடக்கரைப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக கால்நடைத் துறை சார்பில் 7 மருத்துவக் குழுவினர் முகாமிட்டு மாடுகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள். எந்தப் பகுதியிலாவது கால்நடைகளுக்கு கோமாரி நோய் அறிகுறிகள் தென்பட்டால், மருத்துவ உதவிக்கு 9445001122 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். உடனடியாக அருகில் உள்ள மருத்துவக் குழுவை அனுப்பி வைப்போம் என்றார்.

**தீவிரமடைகிறது காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: நிலைமை தொடர்ந்தால் புயலாக மாற வாய்ப்பு**

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி தீவிரமடைந்து வருகிறது. இது இன்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாற அதிக வாய்ப்புள்ளதாகவும், அது மேலும் வலுவடைந்தால் அடுத்த சில நாள்களில் புயலாக மாற வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் தமிழகத்தின் உள்மாவட்டங்களில் பரவலாகவும் கடலோர மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:-

அந்தமான் தீவுக்கு அருகே உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தற்போது வலுவடைந்து சென்னைக்கு 800 கிலோ மீட்டர் தொலைவில் தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக உருவெடுத்துள்ளது. புதன்கிழமையன்று மேலும் வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாற அதிக வாய்ப்புள்ளது.

அத்தகைய சூழலில் தாழ்வு பகுதி நகரும் திசையைப் பொருத்து மழை வாய்ப்பு இருக்கும். அந்த தாழ்வு பகுதி மேலும் தீவிரமடைந்து புயலாக மாறவும் வாய்ப்புள்ளது. இன்று அது நகரும் திசையைப் பொருத்தே தெளிவான நிலைப்பாட்டுக்கு வர முடியும் என்றனர்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: கடலுக்குள் வடக்கு, வடகிழக்கு திசையில் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசுவதால் மீனவர்கள் கடலுக்குள் செல்லும் போது கவனமாக இருக்குமாறு வானிலை மையம் எச்சரித்துள்ளது.

முன்னறிவிப்பு: திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட இடங்களில் புதன்கிழமை பரவலாக மழை பெய்யும். கடலோர மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. செவ்வாய்க்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):- குளச்சல் - 60, கன்னியாகுமரி மாவட்டம் இரணியல், பாபநாசம் - 50, தக்கலை - 30, சிவகிரி - 20, செங்கோட்டை - 10.

**விவசாயிகள் குறைகேட்புக்கூட்டம் ஒத்திவைப்பு**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் மொஹரம் பண்டிகையையொட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

முகாம் நடைபெறவுள்ள நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இதைத் தெரிவித்தார்.

**நவ.29-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் இம்மாதம் 29 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் கோட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் மாதம்தோறும் குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாதம்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் மாவட்ட அளவிலான குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும்.

இம்மாதம் 15ஆம் தேதி மொஹரம் பண்டிகையை முன்னிட்டு கூட்டம் நடைபெறாது. அதற்கு பதிலாக இம்மாதம் 29 ஆம் தேதி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்தார்.

**தென்காலில் அதிக அளவு தண்ணீர் திறப்பு: வாழைகள் பாதிப்பு**

ஸ்ரீவைகுண்டம் அணையின் தென்காலில் அளவுக்கு அதிகமாக தண்ணீர் திறக்கப்பட்டதால் லட்சக்கணக்கான வாழைகள்  பாதிக்கப்பட்டுள்ளன.

மருதூர் மேலக்கால் மூலம் பாசன வசதி பெறும் பெரும்பாலான குளங்கள் நிரம்பாத நிலையில் ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து வீணாக தண்ணீர் செல்வதாக விவசாயிகள் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்ததால் கால்வாய்களில் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து வெளியேறும் தண்ணீரின் அளவு குறையத் தொடங்கியது. ஆனால் பாசனக் கால்வாய்கள் பராமரிப்பின்றி தூர்ந்து நிலையில் உள்ளதால், அதிக அளவு தண்ணீர் திறக்கப்பட்டதால் வடிகால் வழியாக விளைநிலங்களுக்குள் தண்ணீர் புகுந்து விவசாயிகளுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றது.

ஸ்ரீவைகுண்டம் அணையின் தென்காலில் 900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், வடகால் வழியாக புதுக்குடி, ஆதிநாதபுரம், நவலட்சுமிபுரம், வேலவன்காலனி, செம்பூர், பால்குளம் ,திருக்கோளூர், கடையனோடை வரையுள்ள பல லட்சக்கணக்கான வாழைகளுக்குள் தண்ணீர் புகுந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தென்காலில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவை சிறிது குறைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக அடையாமடையில் 105 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

குமரி மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாவட்டத்தின் சில பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக அடையாமடையில் 105 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

பெருஞ்சாணியில் 44.6 மி.மீ., இரணியல் 52 மி.மீ., குளச்சல் 64 மி.மீ., குருந்தன்கோடு 50.6 மி.மீ., கோழிப்போர்விளை 42 மி.மீ., முள்ளங்கினாவிளை 28 மி.மீ., புத்தன் அணை 45 மி.மீ., மற்றும் திற்பரப்பு 5.8 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

இந்த மழையினால் பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 342 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 211 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணையில் இருந்து வினாடிக்கு 332 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து 200 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது.

**கருங்கல் பகுதியில் சாலைகள் சேதம்**

கருங்கல்: கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை தொடங்கி மாலை வரை பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகள் சேதமடைந்தன.

கருங்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சில நாள்களாக அதிக வெப்பம் நிலவியது. மிதமான மழையும் பெய்து வந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு தொடங்கிய பலத்த மழை மாலை வரை நீடித்தது.

இதனால் வெள்ளியாவிளை, நடுத்தேரி, பாலூர், மாங்கரை, நட்டாலம், செல்லங்கோணம், கப்பியறை, பள்ளியாடி, புதுக்கடை, பைங்குளம் உள்ளிட்ட இடங்களில் உள்ள குளங்கள் ஒரளவுக்கு நிறைந்தன.

மேலும் கருங்கல், மார்த்தாண்டம், திக்கணங்கோடு, தேங்காய்பட்டினம் உள்ளிட்ட சாலைகள் மழையால் மீண்டும் சேதமடைந்து போக்குவரத்துக்குத் தகுதியற்ற நிலையில் உள்ளன.

மழை பெய்தவுடன் சாலைகள் சேதமடைவதற்கு, சாலை ஒரங்களில் மழைநீர் ஒடை இல்லாததே காரணம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு**

திருக்கோவிலூர் அருகே மையனூர் கிராமத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

ஊராட்சிமன்றத் தலைவர் ஜெயந்தி சீனுவாசன் தலைமை வகித்து பேரணியைத் தொடங்கி வைத்தார்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரங்கராஜன் முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலர் ஆனந்த் வரவேற்றார்.

கிராமத் தன்னார்வலர் திட்ட ஊக்குநர்கள் காசிலிங்கம், வாசுகி, சுதா ஆகியோர் மழைநீர் சேகரிப்பு அவசியம் குறித்து துண்டுப் பிரசுரம் வழங்கினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.11.2013**

விவசாய மலர்

## நவீன தொழில்நுட்பம்

**பயறுவகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்:**

* செடிகளின் இடைவெளிகளை அதிகரிப்பதன் மூலம் துவரையில் காய்ப்புழுவின் சேதத்தைக் குறைக்கலாம்.

* விதைக்கும் காலத்தை மாற்றுவதன்மூலம் செப்டம்பர் முதல் நவம்பர் வரை பயிரிடப்படும் உளுந்தில் தண்டு ஈ குறைவாகக் காணப்படும்.

* விதையளவை 25 சதவீதம் அதிகப்படுத்தி தண்டு ஈ தாக்கிய செடிகளைக் களைந்து எடுக்க வேண்டும்.

* டிசம்பர் முதல் மார்ச் வரை விதைக்கப்படும் தட்டைப்பயிரில் அசுவினியின் சேதம் அதிகரிக்கும். அக்டோபரில் விதைக்கப்படும் அவரையில் காய்ப்புழுவின் சேதம் அதிகமாகக் காணப்படும். எனவே இப்பருவங்களில் விதைப்பதைத் தவிர்த்தல் நல்லது.

* பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் வயல்களில் இடையிடையேயும், ஓரங்களிலும் மக்காச்சோளம், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற பயிர்களை வரிசையில் வளர்ப்பதால் காய்ப்புழுக்களையும், இலை தின்னும் புழுக்களையும் கட்டுக்குள் வைக்க முடியும்.

* துவரையைத் தாக்கும் புள்ளி காய்ப்புழு, பச்சைக் காய்ப்புழு போன்றவற்றின் அந்துப்பூச்சிகள் இரவில் விளக்கு வெளிச்சத்திற்கு நன்கு கவரப்படக்கூடியவை. எனவே இரவில் 7 மணி முதல் 11 மணி வரை 5 ஏக்கருக்கு ஒரு விளக்கப்பொறி வீதம் வைத்து அந்துப்பூச்சியை அழிப்பதனால், ஏறக்குறைய 200 புழுக்களை அழித்த பயன் கிடைக்கும்.

* இனக்கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு ஐந்து என்ற வீதத்தில் பயிரின்

வளர்ச்சிப்பருவத்தில் வைத்து, காய்ப்புழுக்கள் இலை தின்னும் புழுக்களின் தாய் அந்துப்பூச்சி நடமாட்டத்தைக் கண்காணிக்கலாம்.

* இனக்கவர்ச்சிப்பொறி கண்காணிப்பின்படி தாய்ப்பூச்சிகள் அதிகம் காணப்படும் சமயங்களில் டிரைகோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டைகளை ஏக்கருக்கு 2.3 சிசி எண்ணிக்கையில் முட்டைப் பருவத்திலேயே கட்டுப்படுத்தலாம்.

* தேயிலைப் புழுவின் நடமாட்டம் இரவில் அதிகமாக இருப்பதால் வளர்ந்த புழுக்களை நச்சுத்தீனி வைத்து கவர்ந்து அழிக்கலாம். நச்சுத்தீனி தயார் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு அரிசித்தவிடு 5 கிலோ, நாட்டுச்சர்க்கரை 500கிராம், கார்பரில் 50 சதம் 500 கிராம், தண்ணீர் 3 லிட்டர் ஆகியன தேவை. தவிடு, சர்க்கரை, கார்பரில் மருந்து ஒன்றையும் தண்ணீரில் கலந்து கோலிக்குண்டு போல் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, மாலை வேளையில் வயலில் வைக்கலாம். வரப்பு போன்ற இடங்களில் வைக்க வேண்டும். இரவில் சர்க்கரை வாசத்தில் மண்ணுக்குள் இருக்கிற புழுக்கள் வெளியில் வந்து நச்சுத் தீனியைத் தின்று இறந்துபோய்விடும்.

* இளம் புழுக்கள் தென்பட்டால் ஏக்கருக்கு 200 புழுக்கள் சமன் அளவில் என்.பி.வி. என்ற நச்சுயிரியினைத் தெளிக்கலாம். (அதாவது 600 நோயுற்ற புழுக்களை சேகரித்து கிடைக்கும் அளவு) மாலை வேளையில் தெளிப்பான்களைக் கொண்டு தெளிக்க வேண்டும்.

* புற ஒட்டுண்ணி, கூட்டுப்புழு ஒட்டுண்ணிகளாகிய பிராக்கானிட், ஈசோபிட், ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 800 எண்கள் என்ற அளவில் 10-15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை இடலாம்.

* பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியாவை ஏக்கருக்க 400 முதல் 600 கிராம் வரை நீரில் கலந்து தெளிக்கலாம்.

* தண்டு ஈ, தண்டுப் பூ வண்டு போன்றவற்றை கட்டுப்படுத்த விதைகளுடன் வேப்ப எண்ணெயை கிலோவிற்கு 2.5 மில்லி கலந்து விதைக்கலாம்.

வேப்பம்புண்ணாக்கைப் பொடிசெய்து பயிரின் தூர்களில் இடலாம். இறவைப் பயிர்களில் அடியுரமாகவும் இடலாம்.

* நோய்களைக் கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டைக் கரைசல் அல்லது வேலிக்கருவையின் இலைச்சாறு அல்லது நெய்வேலி காட்டாமணக்கு இலைச்சாறு தெளிக்கலாம்.

* பூண்டுகள் (கைகளில் உறை அணிந்து) பச்சைக் காய்ப்புழுக்கள்,

காய்ப்புழுக்களின் வளர்ந்த புழுக்கள், பூச்சி தாக்கப்பட்ட பாகங்கள், நோய் தாக்கப்பட்ட செடிகள் ஆகியவற்றைப் பிடுங்கி அழிக்க வேண்டும்.
* காய் துளைப்பானைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பரில் 10 சதத் தூள் (அ) மானோ குரோட்டோபாஸ் 1250 மில்லி (அ) வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் (அ) எக்டருக்கு இண்டாக்ஸா கலவை-50 மில்லி (அ) குளோர்பைரிபாஸ் 1000 மிலி (அ) டைகுளோர்வாஸ்-500 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். (தகவல்: முனைவர் வெ.கோ.மதிராஜன், முனைவர் ரா.ராஜேந்திரன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை-612 101.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## நிலக்கடலையில் ஊட்டச்சத்து குறைபாடுகளும் நிவர்த்தியும்

தோராயமாக நிலக்கடலை பயிரானது சுமார் 112 கிலோ தழை, 27 கிலோ மணி மற்றும் 34 கிலோ சாம்பல்சத்து ஆகியவற்றை ஒரு எக்டேர் நிலத்தில் எடுத்துக்கொள்கிறது. இதற்கு வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்தும் தன்மை உண்டு (வேரில் பாக்டீரியா மூலம்) இப்பயிருக்கு சரியாக உரம் இடாவிட்டல் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். இதைத் தவிர்க்க ஊட்டச்சத்து பற்றாக்குறையினை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வது அவசியம்.

**தழைச்சத்து:** இது செடியின் வளர்ச்சிக்கும் இலையுள் பச்சையம் கட்டவும் தேவை. இதன் குறைபாட்டினால் செடிகள் வெளிறிய பச்சை நிறத்தில் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பரிந்துரை செய்யப்பட்ட யூரியாவை சமஅளவில் பிரித்து இடவும்.

**மணிச்சத்து:** விதை வளரும் பருவம் மற்றும் முதிர்ச்சியடைய இச்சத்து மிக அவசியம். இதன் குறைபாட்டினால் விதை இல்லாத கடலை அல்லது சுருங்கிய கடலை போன்ற நிலை ஏற்படும். இதனை கட்டுப்படுத்த சூப்பர் பாஸ்பேட்டை 25-50 கிலோ ஒரு எக்டேர் என்ற அளவில் இடவும்.

**சாம்பல்சத்து:** இது நிலக்கடலையின் வேர் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான சத்து. இதன் குறைபாட்டினால் செடியின் வளர்ச்சி மற்றும் வேர் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனை கட்டுப்படுத்த 50 கிலோ/எக்டர் என்ற அளவில் பொட்டாஷ் உரங்களை இடவும்.

**கால்சியம்:** இந்த சத்து நிலக்கடலையில் உருவாகும் தருணத்தில் மிகவும் தேவை. இதன் குறைபாட்டினால் செடியின் வளர்ச்சி குன்றி மகசூல் பாதிக்கப்படும். இதனை நிவர்த்தி செய்ய 250-500 கிலோ/எக்டேர் என்ற விகிதத்தில் ஜிப்சத்தை மண்ணில் இடவும்.

**கந்தகச்சத்து:** இது நிலக்கடலையில் மிக முக்கியமான ஒரு சத்து ஆகும். இது புரதச்சத்து உருவாகவும், இலையில் பச்சையம் அதிகரிக்கவும் உதவுகிறது. இதன் குறைபாட்டினால் இலைகள் வெளுத்து காணப்படும். ஜிப்சத்தை இடுவதன் மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

**துத்தநாகம்:** இது நிலக்கடலையில் பச்சையம் மற்றும் கடலையின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுகிறது. இதன் குறைபாடுகள் இரும்புச்சத்து குறைபாடு போன்றே காணப்படும். இலையின் நரம்புகளில் கோடுகள் போன்ற அமைப்புகள் தென்படும். இதனை கட்டுப்படுத்த 15 கிலோ ஜிங்க் சல்பேட் ஒரு எக்டேருக்கு என்ற அளவில் இடவும்.

**மெக்னீசியம்:** முதிர்ந்த இலைகள் வெளுத்து காணப்படும். இலை நுனிகள் உள்நோக்கி வளைந்து காணப்படுவதும் இதன் குறைபாடுகள் ஆகும். இதனை கட்டுப்படுத்த ஒரு சதவீதம் மெக்னீசியம் சல்பேட் கரைசல் தெளிக்கவும்.

**இரும்புச்சத்து:** இலைகள் வெளுத்து காணப்படும். இரும்புச்சத்து குறைபாட்டை இதன்மூலம் அறியலாம். இலை நரம்புகளும் வெளுத்து காணப்படும். இந்த குறையை நீக்க 0.5-1 சதவீத பெர்ரஸ் சல்பேட்டுடன் 0.1 சதவீதம் சிட்ரிக் அமிலம் கலந்து வயலில் தெளிக்கவும்.

**போரான்:** இதன் குறைபாட்டினால் இலைகள் நிறமாற்றம் அடைந்து காணப்படும். இலை விளிம்புகள், நரம்புகள் பாதிக்கப்படும். இதனை கட்டுப்படுத்த 10 கிலோ போராக்சை ஒரு எக்டேருக்கு இடவும்.

**மாங்கனீசு:** இலையில் புள்ளிகள் காணப்படுவதே இந்த குறைபாட்டின் அறிகுறிகள். இக்குறைபாட்டை போக்க மாங்கனீசு சல்பேட்டை 0.5 சதவீத கரைசலாகத் தெளிக்கலாம்.

**மாலிப்டினம்:** இதன் குறைபாட்டினால் வளிமண்டலம் நைட்ரஜனை நிலைப்படுத்துவது தடுக்கப்படுகிறது. இக்குறைபாட்டை நீக்க மண்ணில் 0.56-1/72 கிலோ/எக்டேர் என்ற அளவில் அம்மோனியம் மாலிப்டேட்டை இடவும்.

மேற்குறிப்பிட்ட நுண்ணூட்டச்சத்துப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதன்

மூலம் நிலக்கடலையின் மகசூலை அதிகரிக்கலாம்.

**முனைவர் கொ.பாலகிருஷ்ணன்,**

**மதுரை-625 104.**

## தேனியில் தக்காளி விலை அதிகரிப்பு

தேனி : தேனி, ஆண்டிபட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, சித்தையகவுண்டன்பட்டி, டி.சுப்புலாபுரம், வடபுதுப்பட்டி, அரைப்படித்தேவன்பட்டி, பூதிப்புரம், வாழையாத்துப்பட்டி, வீரபாண்டி, கொடுவிலார்பட்டி உட்பட அனைத்து பகுதிகளிலும் தக்காளி விளைவிக்கப்
படுகிறது. எல்லா சீசன்களிலும்
தக்காளி விளைவிக்கப்படுவதால் விளைச்சல் அதிகம் உள்ள நேரங்களில் விலை கிடைப்பதில்லை. தக்காளி கிலோ 2 ரூபாய்க்கு விற்கப்படும்.

விவசாயிகள் எடுப்பு கூலி கூட கிடைக்காமல், செடியிலேயே தக்காளியை அழுக விட்டு விடுவார்கள்.
தற்போது, மழை பெய்வதால், தக்காளி பழங்கள் செடியில் அழுகி விடுகின்றன. இதனால் தோட்டங்களில் பாதிக்கும் குறைவான பழங்களே கையில் வந்து சேர்கிறது. இருப்பினும், மார்க்கெட்டில் தக்காளிக்கு நல்ல விலை கிடைக்கிறது. நேற்று மாலை தேனி மார்க்கெட்டில் 15 கிலோ எடை கொண்ட பெட்டி 400 ரூபாய்க்கு விற்றது. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது.
வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

## பயிர் காப்பீடு தொகை கிடைக்குமா: ஏக்கத்தில் மிளகாய் விவசாயிகள் எதிர்பார்ப்பு

ராமநாதபுரம் : கடந்தாண்டு பருவமழை பொய்ப்பால், மாவட்டத்தில் மிளகாய் சாகுபடியில் பாதிக்கப்பட்ட 15 ஆயிரம் விவசாயிகளுக்கு, உடனடியாக பயிர் காப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என, எதிர்பார்ப்பில் உள்ளனர்.
கடலாடி, முதுகுளத்தூர், பரமக்குடி, ஆர்.எஸ்.மங்கலம், நயினார்கோவில், போகலூர் உட்பட பல பகுதிகளில் 22 ஆயிரம் எக்டேரில், மிளாய் சாகுபடி செய்யப்படுகிறது. 90 சதவீதம் முண்டு, 10 சதவீதம் சம்பா மிளகாய்

விளைவிக்கப்படுகிறது. கடந்தாண்டு பருவ மழை பொய்ப்பால் கடாலாடியில் சாகுபடி செய்த மிளகாய், செடியிலேயே கருகியது.

பாதிப்படைந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள், நிவாரணம் மற்றும், பயிர் காப்பீடு வேண்டி மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்தனர். ஏக்கருக்கு தலா 3000 ரூபாய் நிவாரணம் வழங்கியது.

செவல்பட்டி, விவசாயி முருகேசன் கூறியதாவது: ஆண்டுதோறும் பத்து ஏக்கரில், முண்டு மிளகாய் சாகுபடி செய்து வருகிறேன். பருவமழை பொய்ப்பால் கடந்தாண்டு பாதிப்பிற்கு, இதுவரை பயிர் காப்பீடு தொகை வழங்கவில்லை.

ஏக்கருக்கு தலா 224 ரூபாய் வீதம் காப்பீடு செலுத்தியுள்ளோம். ஆனால், இதுவரை மத்திய அரசு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீடு தொகை வழங்காததால் பெரும்பாலான விவசாயிகள் கவலையடைந்துள்ளனர், என்றார்.

தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கூறியதாவது: கடந்தாண்டு பருவமழை பொய்ப்பால், கடலாடி தாலுகாவில் கொக்கரசன்கோட்டை,

கொண்டுநல்லான்பட்டி, சேதுராஜபுரம், முத்துராமலிங்கபுரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் மிளகாய் சாகுபடி செய்த விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்தனர்.

மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கணக்கிடப்பட்டு, மாவட்ட நிர்வாகம் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டது. பயிர் இன்சூரன்ஸ் செய்த 15 ஆயிரம் மிளகாய் சாகுபடி விவசாயிகளுக்கு, மத்திய அரசு காப்பீடு தொகை இன்னும் வரவில்லை, என்றார்

## கறவை மாடு வளர்ப்போருக்கு மானியத்தில்நீர்த்தெளிப்பான் :அரசு உத்தரவு

சிவகங்கை : ""கால்நடைத்துறை மூலம், கறவை மாடுகள் வளர்ப்போருக்கு, மானிய விலையில் நீர்த்தெளிப்பான், புல்வெட்டும் கருவி வழங்க,'' அரசு உத்தரவிட்டுள்ளது. வெண்மை புரட்சியை உருவாக்கும் நோக்கில், மாநில அரசு, பால் உற்பத்தியை பெருக்க, இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம், தீவன புல் வளர்ப்பு திட்டம் உட்பட பால் உற்பத்திக்கான திட்டங்களை செயல்படுத்தி

வருகிறது.ஒரு கட்டமாக, கறவை மாடுகளுக்கு, வளர்க்கப்படும் புல்களை, நீர் சிக்கன முறையில் தண்ணீர் பாய்ச்ச ஏதுவாக, நீர்த்தெளிப்பான் கருவி,தீவன புற்களை, மாடுகள் சாப்பிடும் போது, செரிமான பிரச்னை ஏற்படாமல் இருக்க, புற்களை வெட்டும் கருவிகள் வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்விரு, கருவிகளும் கால்நடைத்துறை மூலம், மாடு வளர்ப்போருக்கு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. 75 சதவீத மானியம்: இதற்காக, மாடு வளர்ப்போருக்கு, தேவைப்படும் நீர்த்தெளிப்பான், புல்வெட்டும் கருவிகள், 75 சதவீத மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள நீர்த்தெளிப்பான் கருவிக்கு, பயனாளிகள் ரூ.6,250 கட்டினால் போதும். அதே போன்று, ரூ.17,550 மதிப்புள்ள, புல்வெட்டும் கருவிக்கு, பயனாளிகள் ரூ.4,388 கட்டினால் போதும், கருவிகளை பயனாளிகள் இடத்திற்கே கொண்டுவந்து, கால்நடைத்துறையினர் பொருத்தி விடுவர். ஒவ்வொரு மாவட்டத்திற்கும், தலா 80 முதல் 120 கருவிகள் வரை வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. மானிய விலையில், கருவிகள் பெற விரும்புவோர், அந்தந்த பகுதி கால்நடை மருத்துவ நிலையங்களை, அணுகலாம், என, உத்தரவிடப்பட்டுள்ளது.

## துவரை சாகுபடியில் ஏக்கருக்கு 800 கிலோ எடுக்க ஆலோசனை

சிவகங்கை : ""மாவட்டத்தில்,துவரை சாகுபடி செய்து, ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் எடுக்கலாம்," என, விவசாயத்துறை இணை இயக்குனர் செல்லத்துரை கூறினார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில்,பயறு வகை சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில்,துவரை சாகுபடியில் விதைகளை நேரடியாக நிலத்தில் விதைப்பதை விட நாற்றுகளாக வளர்த்து நடவு செய்யும் புதிய தொழில் நுட்பம் செயல்படுத்தபடுகிறது.எக்டேருக்கு ரூ.7,500 மானியம் வீதம் 270 எக்டேரில்,துவரை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதிக நாட்கள் வயதுடைய உயர் விளைச்சல் தரும் மலட்டு தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தியுடைய கோ-7, எல்.ஆர்.ஜி.,41, ரகங்களை சாகுபடி செய்யவேண்டும்.ஏக்கருக்கு ஒரு

கிலோ விதை போதும். பாலிதீன் பைகளில் தொழுஉரம் மணல் கலந்த கலவையை நிரப்பி,பூஞ்சாண மருந்து மற்றும் ரைசோபியம் விதை நேர்த்தி செய்த விதைகளை பாலிதீன் பைகளில் ஒரு பைக்கு 2 விதை வீதம் விதைக்க வேண்டும்.ஒரு ஏக்கருக்கு 2,500 பைகள் தேவைப்படும்.விதைத்த 25 - 30 நாட்களுக்கு பூவாளியால் நீர் பாய்ச்சி நாற்றுகளை வளர்க்க வேண்டும். நடவு வயலினை நன்கு உழவு செய்து மண் மாதிரி ஆய்வின்படி, அடியுரம், நுண்ணூட்ட உரங்கள் இட்டு,6 அடி இடைவெளியில் ஆழச்சால் எடுக்க வேண்டும். ஆழச்சால் வரிசையில் 2 அடி இடைவெளியில் பாலிதீன் பை நாற்றினை,அரை அடி குழி எடுத்து நடவு செய்து, 15 - 20 நாட்களில் களை எடுத்து மண் அணைக்க வேண்டும். நல்ல வாளிப்பான ஒரு நாற்றினை மட்டும் வைத்துவிட்டு, 2வது நாற்றினை அகற்றி விட வேண்டும். நடவு செய்த 20 -30 நாளில் நுனிக்குருத்தினை கிள்ளி விடுவதன் மூலமாக பக்க கிளைகள் அதிகமாக தோன்றி பூங்கொத்து அதிகமாகும். பூ பூக்கும் நேரம் 2 சத டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும். பூக்கும் பருவம் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் நீர் பாய்ச்ச வேண்டும். விவசாயத்துறை மூலம், துவரை நடவிற்கு சொட்டு நீரில் பாசனம் மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துவரை பூக்கும் பருவத்தில் காய்புழுவினை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.நடவு முறையில் துவரை சாகுபடி செய்வதன் மூலம் ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் பெறலாம். தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி, துவரை நடவு செய்ய, அந்தந்த விவசாய உதவி இயக்குனர்களை அணுகலாம்,என்றார்.

### கோமாரி பாதித்த மாடுகள் மூலிகை உருண்டை வழங்கல்

ஈரோடு: ஈரோட்டில் கோமாரி நோய் பாதித்த மாடுகளுக்கு, மதுரையை சேர்ந்த தொண்டு நிறுவனத்தார், 21 மூலிகை மசாலா உருண்டை மருந்தை வழங்கி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், 46 புதூர் பஞ்சாயத்தில், 800க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. 46 புதூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் தங்கவேல்,

செயலாளர் கதிர்வேல் ஆகியோர், கால்நடை துறை டாக்டர்களை அழைத்து வந்து தடுப்பூசி போட்டு வந்தனர்.

இந்நிலையில், மதுரையை சேர்ந்த இயற்கை விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு சேவா தொண்டு அமைப்பை நாடி, கோமாரி நோய்க்கு மருந்து வழங்க கேட்டுக்கொண்டனர்.

நோய் பாதித்த மாடுகளுக்கு இயற்கை முறையில் தயாரித்த மருந்து மற்றும் நோய் எதிர்ப்பு மூலிகை உருண்டைகளை தயாரித்து, இலவசமாக நேற்று வழங்கினர்.

மருந்து தயாரித்து வழங்கிய சேவா அமைப்பு அழகுமலை கூறியதாவது:

கோமாரி நோய் பாதித்த மாடுகளுக்கு இயற்கை மருத்துவமான, சோற்று கற்றாழை, பச்சை மஞ்சள், மஞ்சள், துளசி, வெல்லம் கலந்து அரைத்து சாராக எடுத்து, தினமும், இரண்டு வேலை தலா, 50 மில்லி மாடுகளக்கு கொடுக்கப்படும். தடுப்பு மருந்தாகவும், நோய் பதித்த மாடுகளை இவை குணப்படுத்தவும் செய்யும். ஒரு வார காலத்துக்கு இதை கொடுக்கவேண்டும்.

தவிர, கோமாரி நோயால் மாடுகளின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவிடக்கூடும். இதற்கு, துளசி, தும்பை, ஆவாரம், மொடக்கத்தான், முசு முசுக்கான், வேலி படுத்து, பிரண்டை, புளியம், மஞ்சள் உள்ளிட்ட, 21 வகையான மூலிகை அரைத்து, பேருகால (பிரசவத்துக்கு பின்) பொருட்களுடன் இணைத்து, மூலிகை உருண்டையாக தயாரித்துள்ளோம்.

ஒரு வாரகால மருந்துக்கு பின், மாடுகளுக்கு மூலிகை உருண்டை வழங்கப்படும். இதனால், மாடுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்ககூடும், என்றனர்.

### கால்நடை சந்தையை நிறுத்த முதல்வருக்கு விவசாயிகள் மனு

ஈரோடு: கோமாரி நோய் தாக்கும் அபாயம் இருப்பதால், தமிழகத்தில் கால்நடை சந்தைகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டுமென, தமிழக விவசாயிகள் சங்கத்தினர் முதல்வருக்கு மனு அனுப்பி உள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளர் முனுசாமி, தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதல் தீவிரமடைந்து, ஈரோடு மாவட்டத்தில் உள்ள சித்தோடு, தயிர்பாளையம், நொச்சிபாளையம், பேரோடு, வெள்ளாங்கோவில், கொளத்துப்பாளையம் உள்ளிட்ட பல ஊர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் இறந்து விட்டன.

நோயை தடுக்க கால்நடை மருத்துவர்கள் சிகிச்சை அளித்தாலும், முழுமையாக ஒழிக்கவும், கட்டுப்படுத்தவும் முடியவில்லை. கால்நடை துறை உயர் மருத்துவ நிபுணர்களை பாதிக்கப்பட்ட பகுதிக்கு அனுப்பி வைத்து தீவிர சிகிச்சை அளித்து கால்நடைகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறந்து போன கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் செய்திருந்தாலும், இழப்பீடு கிடைக்காத நிலையில் உள்ளது. கோமாரி நோய் என்பது நோய் தொற்றாக இருப்பதால், அனைத்து கால்நடைகளுக்கும் பரவி இறக்க நேர்கிறது.

கர்நாடகாவில், இன்சூரன்ஸ் செய்து இறந்து போன மாடுகளுக்கும், இன்சூரன்ஸ் செய்யாத மாடுகளுக்கும் தலா, 25 ஆயிரம் ரூபாய் நிவாரண தொ கை வழங்கி வருவதை போல், தமிழக அரசும் வழங்கி, கால்நடை வளர்ப்போரை பாதுகாக்க வேண்டும். தமிழக சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப அதிகமாக பால் சுரக்கும், நோய் தாக்காத கால்நடை வித்துக்களை வழங்க வேண்டும். வெளி மாநிலங்களில் இருந்து வரும் கால்நடையின் தன்மையை விவசாயிகளுக்கு உணர்த்தி, கால்நடை சந்தைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

### விவசாய கூட்டம் தேதி மாற்றம்

ஊட்டி : ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் நாகராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 15ம் தேதி நடப்பதாக அறிவிக்கப்பட் டிருந்தது. நிர்வாக காரணங்களை முன்னிட்டு வரும் 14ம் தேதி காலை 11:00 மணிக்கு மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமையில் நடக்கிறது. எனவே, விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருந்தால், பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து நீர்பாசனம், இடுபொருட்கள்

போன்ற கோரிக்கைகளை மட்டும், "தோட்டக்கலை இணை இயக்குனர்,தபால்பெட்டி எண்.72, ஊட்டி -1' என்ற முகவரிக்கு தபாலிலோ நேரிலோ அனுப்பி வைக்கலாம். இவ்வாறு நாகராஜன் கூறியுள்ளார்.

## துவரை சாகுபடிக்கு மானியம் வேளாண் அதிகாரி தகவல்

கரூர்: "நடப்பாண்டில் துவரை செயல்விளக்கத் திட்டத்திற்கு மானியமாக, 30.75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என, வேளாண் துறையின் இணை இயக்குநர் தெய்வேந்திரன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில், 1,823 ஹெக்டேர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. துவரை செயல்விளக்கத் திட்டத்தின்,140 ஹெக்டேர் பரப்பளவிற்கு, 50 சதவிகித மானியமாக, ஒரு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் வீதம், 10.5 லட்சம் மதிப்பில் உரம், கருவிகள் உள்ளிட்ட இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தில் துவரை செயல்விளக்கத் திடல் அமைக்க, 410 ஹெக்டேர் பரப்பளவிற்கு, 50 சதவிகித மானியமாக ஒரு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் வீதம், 30.75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கரூர் மாவட்டத்தில் என்.ஏ.பி.டி., துவரை செயல்விளக்கத் திடல் நடவு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இத்திட்டத்தில், ஒரு ஹெக்டேருக்கு மானியமாக 7,500 ரூபாய் மதிப்பில் விதை, உரம், பூச்சி மருந்து, உயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் போன்ற இடுபொருள்களுக்கும் மற்றும் இதர செலவினங்களுக்கும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### கால்நடைகளுக்கு இன்று மூலிகை மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், கால்நடைகளுக்கு பரவி வரும் நோய்களை தடுக்க, மூலிகை சிகிச்சை தொடர்பான, மூலிகை மருத்துவ முகாம், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில், இன்று நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைகள், பல்வேறு விதமான நோய் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. நோய் தாக்கிய கால்நடைகளுக்கு, மூலிகை மருந்துகளால் சிகிச்சை அளிப்பது குறித்து, காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில், இன்று சிறப்பு முகாம் நடக்கிறது. இதில், தமிழ்நாடு கால்நடை விரிவாக்க, கல்வி இயக்குனர் சந்தரஹாசன் கலந்துகொண்டு, மூலிகை மருத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்க உள்ளார். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தீர்க்க, இருளர் பழங்குடியினத்தவர் பின்பற்றும் மூலிகை மருத்துவ நோய் தடுப்பு முறை குறித்தும், இந்த முகாமில் விளக்கப்படுகிறது. இருளர் பெண்கள், பழங்குடி நல மைய இயக்குனர் ராஜேந்தின் இது பற்றி பேசுகிறார் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள், இந்த முகாமில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என, வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் குமாரவேல் தெரிவித்து உள்ளார்.

### மரம் வளர்த்தல் திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயன்பெற அழைப்பு

செஞ்சி:வனத்துறையின் மூலம் தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயனடையலாம்.

செஞ்சி வனச்சரகர் பெருமாள் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வனத்துறை மூலம் தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் 2011-2012ம் ஆண்டு துவங்கப்பட்டு 2019ம் ஆண்டு வரை விழுப்புரம் மாவட்டத்தில், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, திண்டிவனம், செஞ்சி வனச்சரக பகுதியில் தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் வரும் வகையிலும், சுற்றுசூழல் மேம்பாடு, நிலைத்த நீடித்த வளச்சியை உறுதி படுத்தவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

விரும்பும் விவசாயிகளின் பட்டா நிலங்களில் இலவசமாக மரக்கன்றுகள் நடவு செய்து தரப்படும். மரக்கன்றுகளின் பலன் முழுவதும் நில உரிமையாளரையே சாரும். ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் வீதம் நட்டு 3 வருடம் பாதுகாத்தால் வனத்துறை மூலம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

விவசாயத்திற்கு பாதிப்பு வராத வகையில் வரப்பு ஓரங்களிலும், ஊடு பயிராகவும் மரக்கன்றுகளை நடலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெரிய விவசாயிகளுக்கு 12.5 ஏக்கர் வரையில் உரிய எண்ணிக்கையில் மரக்கன்றுகள் வழங்கப்
படும்.

சுய உதவிக் குழுவினர் தங்களின் நிலத்திலோ, வீட்டிலோ மரம் வளர்க்க விரும்பினால் 20 மரக் கன்றுகள் வழங்கப்படும்.

தனிப்பட்ட முறையில் விவசாயிகள் விரும்பினால் 50 மரக்கன்றுகள் வரை நடவு செய்து தரப்படும். விருப்பம் தெரிவிக்கும் விவாயிகளின் கிராமத்திற்கே வந்து வனத் துறையினர் தகவல் சேகரித்து நிலத்தின் சிட்டா, பாஸ்போட் சைஸ் போட்டோ இரண்டு, ரேஷன் கார்டு நகல் பெற்று கொள்
வார்கள்.

கடந்த நிதியாண்டில் செஞ்சி வனச்சரகத்தின் கீழ் உள்ள ஆலம்பூண்டி, சோ.குப்பம், செம்மேடு, நயம்பாடி ஆகிய கிராமங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு காரை, புலிவந்தி, சித்தரசூர், வரிக்கல், பொன்னங்குப்பம், துத்திப்பட்டு கிராமங்களில் திட்டம் செயல்படுத்த உள்ளது.

மேலும் விவரங்களை பெற செஞ்சி வனத்துறை அலுவலகம் எண் 04145-223234 மற்றும் 94456 68636 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## கோலியஸ் விலை அதிகரிக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

சின்னசேலம்:சின்னசேலத்தில் கோலியஸ் கூடுதல் விலைக்கு விற்கப்படுமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

சின்னசேலம் தாலுகாவில் ராயர்பாளையம், பெத்தானூர், தோட்டப்பாடி,

பெத்தாசமுத்திரம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் ஆறு மாத பயிரான கோலியஸ் கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதம் பயிரிட்டனர்.

முதலில் நிலங்களை நான்கு முதல் ஐந்து முறை உழுது பதப்படுத்தினர். இறுதியாக உழும் போது வேப்பம் பின்னாக்கு, டி.ஏ.பி., மற்றும் எருக்களை உரமாக இட்டனர். பின்பு கரை அமைத்து தண்ணீர் விட்டு நடவு செய்தனர். 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் இறைக்க வேண்டும். 45 நாட்களுக்கு ஒரு முறை உரம் கொடுக்க வேண்டும். நன்கு பராமரித்தால் சாகுபடியின் போது ஏக்கருக்கு 5-6 டன் கோலியஸ் கிழங்கு கிடைக்கும். கடந்த ஆண்டு ஒரு டன் அதிகபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் வரை விற்றது.

அனைத்து செலவுகளும் போக ஏக்கருக்கு 2 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைத்தது. அதிக லாபம், குறைந்த பராமரிப்பு செலவு, தண்ணீர் தேவை குறைவு போன்றவற்றால் இந்த ஆண்டு விவசாயிகள் அதிக பரப்பளவில் கோலியஸ் பயிரிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு விற்ற விலைக்கே இந்த ஆண்டும் விற்கப்படுமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## மழையை தொடர்ந்துபனிப்பொழிவால் காய்கறி விலை கிடுகிடு : கார்த்திகை மாதம் பிறப்பதால் மேலும் அதிகரிக்கும் அபாயம்

சேலம்: தமிழகத்தில் கடந்த வாரம் வரை, பெய்து வந்த வடகிழக்கு பருவமழையின் தாக்கம் சற்று குறைந்துள்ள நிலையில், பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்து சரிந்து, விலை உயர்ந்துள்ளது. கார்த்திகை மாதம் பிறக்க இன்னும் சில நாட்களே உள்ளதால், காய்கறி விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர். சேலத்தில் இயங்கும் உழவர்சந்தை, மார்க்கெட்டுகளுக்கு பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, பாரப்பட்டி, நிலவாரப்பட்டி, ஓமலூர், சங்ககிரி, இடைப்பாடடி, மகுடஞ்சாவடி ஆகிய பகுதிகளில் இருந்தும், ஒசூர், ஊட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய

இடங்களில் இருந்தும் காய்கறி விற்பனைக்கு வருவது வழக்கம்.

தமிழகத்தில் கடந்த வாரம் வரை, பெய்து வந்த வடகிழக்கு பருவமழை காரணமாக, விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி இருந்தது. காய்கறிகளை பறிக்க முடியாத நிலை ஏற்பட்டதோடு, தண்ணீர் தேக்கத்தால் காய்கறிகள் அழுகி விட்டன.

தற்போது மழையின் தாக்கம் குறைந்துள்ள நிலையில், விளைநிலங்களில் தேங்கிய தண்ணீரும் வடிந்து வருகிறது. இந்நிலையில், காலை, இரவு நேரங்களில், பனிப் பொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், காய்கறி அறுவடை பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், மார்க்கெட், உழவர்சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவால், உள்ளூர் காய்கறிகளான தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், புடலங்காய், அவரைக்காய் ஆகியவற்றின் விலை, கிலோவுக்கு, நான்கு ரூபாய் முதல், பத்து ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் தக்காளி கிலோ, 25 ரூபாய்க்கு விற்றது, 29 ரூபாயாகவும், கத்தரிக்காய், 20 ரூபாய்க்கு விற்றது, 28 ரூபாயாகவும், வெண்டைக்காய், ஆறு ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாயாகவும், பீர்க்கங்காய், புடலங்காய், பாகற்காய், கொத்தவரைக்காய் ஆகியன தலா கிலோ, 10 ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாயாக உயர்ந்துள்ளது.

உள்ளூர் காய்கறிகளின் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதை அடுத்து, வெளியூர் காய்கறிகளின் விலையிலும் உயர்வு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

நேற்றைய நிலையில் வெளியூர் காய்கறிகளின் விலை நிலவரம்:

சின்னவெங்காயம் கிலோ, 64 ரூபாய், கேரட், 46 ரூபாய், பீட்ரூட், 20 ரூபாய், பீன்ஸ், 36 ரூபாய், முட்டைகோஸ், 22 ரூபாய், உருளை கிழங்கு, 40 ரூபாய், நூல்கோல், 24 ரூபாய், பெரிய வெங்காயம், 56 ரூபாய்க்கு விற்கிறது. இந்த விலை இன்னும் சில நாளில், கிலோவுக்கு, மூன்று ரூபாய் முதல், ஏழு ரூபாய் வரை உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

இன்னும் சில நாளில் கார்த்திகை மாதம் பிறக்கிறது. இதனால், காய்கறிகளின் தேவையும் அதிகரிக்கும். தற்போது உள்ள நிலையில் வரத்து தொடர்ந்து சரிவை சந்தித்து வருவதால், காய்கறி விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது, என்றார்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 390 காசு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 390 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 385 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, நுகர்வு அதிகரித்துள்ளதால், மேலும், ஐந்து காசு அதிகரித்து, 390 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 380, பெங்களூரு, 375, மைசூர், 374, ஹைதராபாத், 368, மும்பை, 405, விஜயவாடா, 363, கோல்கத்தா, 420, பர்வாலா, 388, டில்லி, 404.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, ஐந்து ரூபாய் குறைக்கப்பட்டு, 42 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.11.2013**

**மின்சார பற்றாக்குறையால் பயிர்கள் கருகுகிறது விவசாயிகள் கவலை**

ராமநாதபுரம், : நயினார்கோவில் வட்டாரத்தில் 3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்குவதால் காய்கறி பயிர்கள் உட்பட பயிர்கள் கருகுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நயினார்கோவில் அருகே பாண்டியூர், கே.வலசை, அரசரடி வண்டல் பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த கிராமங்களில் விவசாயம் ஆழ்குழாய் கிணற்று பாசனத்தை நம்பி உள்ளது. இக்கிராமங்களில் காய்கறிகள், கீரை, வாழை, கரும்பு ஆகியவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. இக்கிராமங்களைச் சுற்றிலும் 150க்கும் மேற்பட்ட மும்முனை இணைப்பு கொண்ட விவசாய பம்பு செட்டுகள் உள்ளன. இப்பகுதிகளில் 500 ஏக்கருக்கு மேல் காய்கறி பயிர்களும், வாழை, கரும்பு பயிரிடப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், கீரைகள் ராமநாதபுரம் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த 3 மாதங்களாக விவசாய பம்பு செட்டுகளுக்கு 3 மணி நேரம் மட்டும் மும்முனை இணைப்பு மின்சாரம் வழங்கப்படுகிறது. அதனால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். காய்கறி பயிர்கள் உட்பட பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து வருகின்றன. இங்குள்ள விவசாயிகள் கண்ணீர் விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முத்துராமலிங்கம் உட்பட விவசாயிகள் கலெக்டரின் மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் நேற்று மாவட்ட வருவாய் அலுவலர் விஸ்வநாதனிடம், தொடர்ந்து மின்சாரம் வழங்கி விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என மனு அளித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

**கோமாரி நோய் வராமல் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி அவசியம்**

ஈரோடு, : ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் யசோதை, உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், கவிதா ஆகியோர் தெரிவித்துள்ளதாவது: கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயானது வாய்சப்பை, கால் சப்பை, வாய் காணை, கால்காணை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இந்த நோயானது பெரும்பாலும் மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்குகிறது. இந்த நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகும். ஒரு முறை போடப்படும் தடுப்பூசி மூலம் 4 மாத காலத்திற்கு கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு திறனை கூட்டலாம். பல்வேறு காரணங்களால் தடுப்பூசி போடாத கால்நடைகளில் நோய் எதிர்ப்பு திறன் குறையும்போது இந்த நோய் ஏற்படுவதை தடுக்க இயலாது. இதுபோன்ற நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமாக நோய் பாதிப்பை குறைக்கலாம்.

வாய் மற்றும் நாக்கில் புண் இருப்பதால் பசுந்தீவனம், உலர் தீவனங்களை உட்கொள்ள இயலாது. ஆகையால் கஞ்சி காய்ச்சி ஆற வைத்து கால்நடைகளுக்கு கொடுக்கலாம். இயற்கை வழி சிகிச்சை முறைகளையும மேற்கொள்ளலாம். சீரகம், வெந்தயம் மற்றும் மிளகு போன்றவற்றை தலா 20 கிராம் எடுத்து ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நன்கு அரைக்க வேண்டும். பின்னர் இதனுடன் 20 கிராம் மஞ்சள், பூண்டு நான்குபல், 100 கிராம் வெல்லம் போன்றவற்றை சேர்த்து பசைபோல தயார் செய்ய வேண்டும்.

இறுதியாக முழு தேங்காயில் இருந்து பெறப்பட்ட தேங்காய் துருவலை சேர்க்க வேண்டும். இதனை சரிபாதியாக காலை, மாலை வேளைகளில் கொடுக்க வேண்டும். கலவை கொடுத்த பிறகு இறுதியாக 50 கிராம் அளவிற்கு வெண்ணெய், நெய் சேர்த்து வாய்ப்புண்ணின் மேல் தடவினால் சீக்கிரம் ஆறிவிடும். இதனை குறைந்தது 4, 5 நாட்கள் வரை தொடர்ந்து செய்து வரவேண்டும். கால் குளம்புகளில் உள்ள புண் மற்றும் மடிக்காம்புகளில் உள்ள புண்ணிற்கு பூண்டு 10

பல், மஞ்சள் 10 கிராம், துளசி, குப்பைமேனி, மருதாணி, வேப்பிலை தலா 10 இலைகள் போன்றவற்றை நன்கு அரைத்து அதனுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சேர்த்து 10 நிமிடம் வரை சூடுபடுத்தி பின்னர் ஆறவைக்க வேண்டும். இதனை கால்குளம்பு, மடிக்காம்பு மீது தடவி விட வேண்டும். மேலும் கால்நடைகளை பொதுவான மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது. மாடுகளை வாங்குதோ, விற்பதோ கூடாது. வெளி ஆட்களை பண்ணைக்குள் அனுமதிக்க வேண்டும். கால்நடைகள் உள்ள கொட்டகையின் தரைப்பகுதியை நன்கு சுத்தம் செய்து அதன் மேல் சுண்ணாம்பு தூள் அல்லது பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக கிருமிகளின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கால்நடைகளை நோயில் இருந்து காப்பாற்றலாம் என்று தெரிவித்துள்ளனர்.

## கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி ஈரோட்டில் மாட்டுச் சந்தைகளை தற்காலிகமாக மூட கலெக்டர் உத்தரவு

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் வேகமாக பரவி வரும் கோமாரி நோயின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் செயல்பட்டு வரும் கால்நடை சந்தைகளை மூட மாவட்ட கலெக்டர் சண்முகம் நேற்று உத்தரவிட்டார். கோமாரி தொற்று நோய் பரவுவதை தடுக்கும் வகையில் கால்நடைத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கால்நடைகளுக்கு கோமாரி தொற்று நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் வகையில் விஏஓ., ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகள், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை உதவியாளர்கள் மத்தியில் கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கிராமங்கள் தோறும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிக்கான முகாம், கால்நடைகள் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேடுகளை கால்நடை மருத்துவர்கள் வைத்திருக்க வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து ஈரோடு மாவட்டத்துக்கு வாகனங்களில் கொண்டு வரப்படும் கால்நடைகளால் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் வெளி மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் கால்நடைகள் கொண்டு வர முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு கருங்கல்பாளையத்தில்

புதன், வியாழக்கிழமையிலும், புளியம்பட்டியில் வியாழக்கிழமை, கோபி மொடச்சூரில் சனிக்கிழமை, அந்தியூர் ஞாயிற்றுகிழமை, சீனாபுரத்தில் வெள்ளிக்கிழமையிலும் நடைபெறும் மாட்டுச்சந்தைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
கால்நடைகளை கட்டி வைக்கப்படும் கொட்டகை யை சுற்றிலும் சலவை சோடா உப்பு அல்லது பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை தூவி நோய்கிருமிகளை அழிக்கவும். கிராமங்களில் நடைபெறும் கால்நடை மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட்டு நோய் பரவுவதை தடுக்க பொதுமக்கள் உதவி செய்ய வேண்டும் என ஈரோடு மாவட்ட கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

**வெங்காய விலை உயர்வு எதிரொலி முட்டை ஆம்லேட்டில் முட்டைகோஸ்**

தேனி, : விலை உயர்வு எதிரொலியால் தேனி மாவட்டத்தில் உள்ள பல ஓட்டல்களில் முட்டை ஆம்லேட் முட்டைக்கோஸ் ஆம்லேட்டாக மாறி உள்ளது. கடந்த சில மாதங்களாக வெங்காயத்தின் விலை விண்ணை தொடுகிறது. ரூ.50ல் ஆரம்பித்த வெங்காய விலை தற்போது 80, 100 என்று பறந்து கொண்டே இருக்கிறது. ‘மொத்தமாக வாங்கினா 3 மாசம் கூட வச்சுக்கலாம்’ என வாங்கி குவிக்கும் இல்லத்தரசிகள், தற்போது விலையை பார்த்து விட்டு ‘ஐய்யய்யோ’ 100, 200 கிராம் போடுப்பா... போதும்’ என்று சொல்லும் நிலைக்கு போய் விட்டது. இட்லிக்கு கூட யாரும் மறந்து கூட வெங்காய சட்னி வைப்பதில்லை. இந்த விலை ஏற்றம் ஓட்டல் வியாபாரத்தையும் பாதித்துள்ளது. பெரும்பாலான ஓட்டல்களில் முட்டை ஆம்லேட்டில் வெங்காயத்திற்கு பதிலாக முட்டைகோசை சேர்த்து விடுகின்றனர். சிலஇடங்களில் வெங்காயத்தோடு மிக்சிங் செய்யும் வேலையும் நடக் கிறது. இதுகுறித்து கதிரவன் கூறுகையில், ‘வெங்காய விலை ஏறினாலே இது போன்று நடப்பது சகஜம்தான். வீட்டில் கூட வெங்காய பயன்பாடு குறைந்து விட்டது. ஒரு சில ஓட்டல்கள், இரவு நேர டிபன் கடைகளில் மட்டுமே முட்டைகோஸ் பயன்படுத்தப்படுகிறது’ என்றார்.

**அறுவடை வயல்களில் அதிகாரிகள் ஆய்வு**

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் அறுவடை வயல்களை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.
சின்னமனூரில் குச் சனூர், மார்க்கயன்கோட்டை, வேம்படி களம், முத்துலாபுரம் பிரிவு, சீலையம்பட்டி உள்ளிட்ட இடங்களில் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் இருபோக நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது. கடந்த ஜூன் 28ல் முல்லை பெரியாறு அணையில் திறக்கப்பட்ட தண்ணீ ரால் முதல் போகத் திற்காக நாற்றாங்கல் பணி துவங்கி 25 நாட்களில் நடவு செய்து முடிக்கப்பட்டது. தற்போது 120 நாட்களில் கதிர் வளர்ந்து நல்ல விளைச்சல் கண்டுள்ளது. சின்னமனூர் வேளாண்மை துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி விவசாயிகள் விளைச்சலை பெருக்கி உள்ளனர். தொடர்ந்து வழக்கத்திற்கு மாறாக 20 சதவீதம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் வேளாண்மை அதிகாரி கள் மகிழ்ச்சியில் உள் ளனர். இந்நிலையில் அறு வடை துவங்கி வேகமாக நடந்து வரும் நிலையில் வேளாண்மை உதவி இயக்குனர் அழகநாகேந்திரன் தலைமையில் அதிகாரிகள் சின்னமனூர் வயல்வெளிகளை பார்வையிட்டு வருகின்றனர். மேலும் வியாபார நுணுக்கங்கள் தொடர்பாகவும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றனர்.
தற்போது அறுவடை இயந்திரங்களின் மூலம் சின்னமனூர் பகுதியில் விவசாயம் மும்முரமாக நடந்து வருகிறது.

**பீகார், உ.பி.க்கு தினமும் 15 லட்சம் முட்டை சப்ளை**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து முட்டை விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. இந்நிலையில், நேற்று நடந்த தேசிய

முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டது. இதனால் 385 காசாக இருந்த முட்டை விலை 390 காசாக உயர்ந்தது. பீகார், உத்தரப் பிரதேசத்துக்கு தினமும் நாமக்கல்லில் இருந்து 15 லட்சம் முட்டைகள் செல்கிறது. கேரள மார்க்கெட் குறைந்தாலும், வடமாநிலங்களில் முட்டை தேவை அதிகரித்துள்ளது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்ந்துள்ளது

**வாழைத்தார் வரத்து அதிகரிப்பு**



கோவை: கோவை மாவட்டத்துக்கு நாமக்கல் மாவட்டம் மோகனூர், புதுக்கோட்டை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், கோபிச்செட்டிபாளையம், அந்தியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வாழைத்தார் வரத்து இருக்கிறது. தவிர, கோவை மாவட்டத்தில் மாதம்பட்டி, ஆனைமலை, மேட்டுப்பாளையம், தொண்டாமுத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாழைத்தார் வரத்து இருக்கிறது. இவை, தடாகம் ரோட்டில் உள்ள வாழைக்காய் கமிஷன் மண்டிக்கு கொண்டுவரப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது, சீசன் துவங்கியுள்ளதால் தென்மாவட்டமான கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் வாழைத்தார் வரத்து கடந்த 2 மாதங்களாக அதிகரித்துள்ளது.

தேனி மாவட்டம் சின்னமன்னூர் பகுதியில் இருந்து மோரீஸ் வகை வாழைத்தார் அதிகளவில் வருகிறது. தென்மாவட்டங்களில் இருந்து பூவன் ரகம் அதிகம் வருகிறது. கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்து கற்பூரவல்லி ரகம் அதிகளவில் வருகிறது. கோவைக்கு ஒரு நாளைக்கு 7 முதல் 8 லோடு வாழைத்தார் வரும். ஒரு லோடில் 100 முதல் 200 வாழைத்தார்கள் வரை இடம்பிடிக்கும். தற்போது, தினம் 10 லோடு வாழைத்தார் வரத்துவங்கியுள்ளது. அதனால், ஒரு வாழைத்தாருக்கு சராசரியாக 50 ரூபாய் விலை குறைந்துள்ளது. பூவன் ரகம் 150 முதல் 400 வரையிலும், மோரிஸ் 150 முதல் 400 வரையிலும், கற்பூரவல்லி 200 முதல் 400 வரையிலும் விற்கப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.11.2013**

## சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.70 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்



அவினாசியை அடுத்த சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பிரதி வாரம் திங்கட்கிழமைதோறும் நிலக்கடலை ஏலம் நடைபெறும். அதேபோல் இந்த வாரம் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 5 ஆயிரம் மூட்டைகள் வந்திருந்தன. இது கடந்த வாரத்தை காட்டிலும் 2 ஆயிரம் மூட்டைகள் அதிகம்.

ஏலத்தில் நிலக்கடலை முதல் ரகம் குவிண்டால் ரூ.4,200 முதல் ரூ.4600 வரையிலும், 2–வது தரம் ரூ.3800 முதல் ரூ.4,250 வரையிலும், 3–வது ரகம் ரூ.3,300 முதல் ரூ.3,600 வரையிலும், பச்சை ரகம் ரூ.1500 முதல் ரூ.1900 வரையிலும் வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.70 லட்சம் ஆகும்.

ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சண்முகம் கூறுகையில், ‘இந்த வாரம் நடந்த ஏலத்திற்கு திருச்செங்கோடு, மணப்பாறை உள்ளிட்ட பகுதிகளில்

இருந்து 21 வியாபாரிகளும், 500 விவசாயிகளும் கலந்து கொண்டனர். வரத்து அதிகமாக இருந்ததுடன் கடந்த வாரத்தை காட்டிலும் நிலக்கடலை மிகவும் தரமானதாக இருந்தது. வியாபாரிகள் கடந்த வாரத்தை காட்டிலும் அதிக விலைக்கு நிலக்கடலையை ஏலத்தில் எடுத்தனர்' என்று தெரிவித்தார்.

**கோமாரி நோய் தாக்குதலில் இருந்து கால்நடைகளை காப்பாற்றுவது எப்படி?**




உடுமலை,

கோமாரி நோய் தாக்குதலில் இருந்து கால்நடைகளை காப்பாற்றுவது எப்படி? என்பது குறித்து அதிகாரிகளுடன் ஆர்.டி.ஓ. ஆலோசனை நடத்தினார்.

**ஆலோசனைக்கூட்டம்**

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி தொற்று நோயை தடுப்பது குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டம் உடுமலை தாலுகா அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு ஆர்.டி.ஓ. நா.குணசேகரன் தலைமை தாங்கி பேசினார். உடுமலை தாசில்தார் எஸ்.ரத்தினம், மடத்துக்குளம் தாசில்தார் விஜயகுமார்,கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குனர் டாக்டர் வாசுதேவன், போலீஸ் இன்ஸ்பெக்டர் சி.முருகையயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிலவருவாய் ஆய்வாளர் வெ.ராமலிங்கம், சிறப்பு போலீஸ் சப்–இன்ஸ் பெக்டர் எல்.சக்திவேல், நகராட்சி சுகாதார ஆய்வாளர் செல்வம் மற்றும் கால்நடை பாரா மரிப்பு துறை டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆர்.டிஓ. நா.குணசேகரன் பேசியதாவது:–

**துண்டு பிரசுரங்கள்**

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி தொற்று நோயினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துண்டு பிரசுரங்கள், வினியோகிக்கப்படும் உடுமலையில் இதுவரை கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கியதாக புகார் எதுவும் வரவில்லை. இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கால்நடை பராமரிப்புதுறையினர் கடந்த செப்டம்பர் மாதம் 15–ந்தேதி முதலே கிராமங்களில் தடுப்பூசி முகாம்கள் நடத்தி வருகின்றனர். இந்த முகாம்கள் நடத்துவது தொடரப்பட வேண்டும். இந்த முகாமிற்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் ஒத்துழைப்பு கொடுக் வேண்டும்.

**தடை**

கோமாரி நோய் குறித்த பிரச்சினை தீரும்வரை உடுமலை மற்றும் பூளவாடி ஆகிய இடங்களில் கால்நடை சந்தை கூடாது. எனவே கால்நடைகளை விற்பனைக்கு கொண்டுவர வேண்டாம். மேலும் திருப்பூர் மாவட்டத்திற்குள், வெளி மாவட்டத்தில் இருந்து கால்நடைகளை கொண்டுவர தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதன்படி உடுமலை, மடத்துக்குளத்தில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் சுற்றுப் பகுதிகளில் கால்நடைகள் கொண்டு வரப்பட்டால் நெடுஞ்சாலை ரோந்து பணில் போலீசாரால் தடுக்கப்படும். போலீஸ் சோதனை சாவடிகளிலும் தடுக்கப்படும்.

நகராட்சி பகுதிகளிலும் தடுக்கப்படும். விற்பனையாளர்கள் நகராட்சியின் முத்திரை பெற்ற பின்னரே இறைச்சியை விற்பனை செய்ய வேண்டும். கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு பொது மக்களும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஆர்.டி.ஒ. நா.குணசேகரன் பேசினார்.

**கடந்த பருவத்தில் சர்வதேச காபி ஏற்றுமதி 11 கோடி மூட்டைகளாக உயர்வு**

புதுடெல்லி,

சர்வதேச அளவில், கடந்த 2012–13 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்), காபி ஏற்றுமதி வரலாறு காணாத அளவிற்கு 11.02 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. (ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபி கொட்டைகளை கொண்டதாகும்). காபி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள பிரேசில், இந்தோனேஷியா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளின் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்ததால் சர்வதேச அளவில் ஏற்றுமதி நன்கு அதிகரித்துள்ளதாக சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரேசில் நாடு 3.09 கோடி மூட்டை காபியை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தோனேஷியாவின் ஏற்றுமதி 1.06 கோடி மூட்டைகளாக உள்ளது. காபி ஏற்றுமதியில் பிரேசில் முதலிடத்திலும், இந்தோனேஷியா மூன்றாவது இடத்திலும் இருந்து வருகின்றன. கொலம்பியா நாடு 88.40 லட்சம் மூட்டை காபியை ஏற்றுமதி செய்துள்ளது.

காபி ஏற்றுமதியில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் தேயிலைதான் அதிகம் நுகரப்படுகிறது. எனவே உற்பத்தியாகும் காபியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. கடந்த பருவத்தில் நமது காபி ஏற்றுமதி 51.60 லட்சம் மூட்டைகளாக குறைந்துள்ளது. முந்தைய பருவத்தில் நமது ஏற்றுமதி 53.60 லட்சம் மூட்டைகளாக இருந்தது. காபி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தில் இருந்து வரும் வியட்நாமின் ஏற்றுமதி 2.17 கோடி மூட்டைகளிலிருந்து 2 கோடியாக குறைந்துள்ளது.

2012–13 பருவத்தில் உலக காபி உற்பத்தியும் வரலாறு காணாத அளவிற்கு 14.52 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. இதனால் ஏற்றுமதிக்கான தேவைகள் சிறப்பாக பூர்த்தி செய்யப்பட்டதாக சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது.

**நவம்பர் மாதத்திலிருந்து உரங்கள் விற்பனை அதிகரிக்க வாய்ப்பு**



கொல்கத்தா,

நவம்பர் மாதத்திலிருந்து உரங்கள் விற்பனை அதிகரிக்கும் என ஐ.சி.ஐ.எஸ். நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் பெட்ரோ ரசாயனம், எரிசக்தி மற்றும் உரம் ஆகிய துறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, மதிப்பீடுகளை வெளியிட்டு வருகிறது.

அக்டோபர் மாதத்திலும், நவம்பரில் இதுவரையிலும் யூரியா, அம்மோனியா, கந்தகம் மற்றும் பொட்டாஷ் ஆகிய உரங்களின் விற்பனை விறுவிறுப்பாக இருந்தது. இனி வரும் மாதங்களில் விற்பனை மேலும் சூடுபிடிக்கும் என ஐ.சி.ஐ.எஸ். தெரிவித்துள்ளது.

செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 10 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 15 முதல் 25 லட்சம் டன் வரை மேலும் யூரியா இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுத் துறையைச் சேர்ந்த எஸ்.டி.சி. மற்றும் எம்.எம்.டி.சி. ஆகிய நிறுவனங்கள் டெண்டர்கள் மூலம் உரங்களை இறக்குமதி செய்து வருகின்றன.

இந்த ஆண்டில் பருவமழை நிலவரம் சிறப்பாக இருந்ததால் வேளாண் நடவடிக்கைகள் விறுவிறுப்பாக உள்ளன. எனவே உரங்களுக்கான தேவைப்பாடு உயர்ந்து விற்பனையும் அதிகரித்துள்ளது.